ஒரு கோடைகால கிழமை நாளில் பெற்றோல் வங்கியில் வேலை செய்து கொண்டிருந்த எனக்கு இனம் புரியாத இவனது சந்திப்பு பல காலம் புரியாத புதிராகவே இருந்தது. கையைக் காட்டு என்றவனிடம் எவ்வளவு பணம் தரவேண்டும் என்றேன். சரி பணத்தைக் கொடுத்தாலும் அவனது தோற்றம் வயது மொத்தத்தில் அவனது கெட்டப் அப்படிப் பெரிதாக என்ன சொல்லிவிடப் போகின்றான் என்றது. சற்றுக்கடினமான குரலில் நான் பணத்திற்காக வரவில்லை என்றவன் உனக்குத் தெரியுமா ரிஸிகேசம் இமாலயப் பிரதேசம் என்றவனை நோக்கி நான் அவற்றைப்பற்றி

படித்திருக்கின்றேன். தொலைக்காட்சிகளில் கணணியில் பார்த்திருக்கின்றேன் என்றேன். நான் அங்கிருந்து வருகின்றேன் என்றான். சரி எனக்குப் பக்கத்தில் மாலை நேர கடமைக்காக வந்த ஊழியர் நின்றிருக்க நீ அவருக்குப் பார் என்றேன். இல்லை நான் உன் கையைப் பார்ப்பதற்காகத்தான் வந்தேன். நீ இப்பொழுது காட்டாவிட்டால் இன்னும் பத்து வருடங்களின் பின் நாங்கள் சந்திப்போம் என்றவாறு வேகமாக கதவை அடித்து மூடியபடியே வெளியேறினான்.
என்னை அழைத்துப்போக வந்த என் தம்பியிடம் நடந்தவற்றைச் சொன்னவுடன் அவசரமாக தேடினோம். எங்கள் புறக்கண்ணில் அந்தப் பையன் அகப்படவில்லை. இத்தனைக்கும் ஒரு நாளிகை கூட ஆகவில்லை.

ஏதோ ஒரு சோகத்தில் என் இதயம் ரணமாகி மனதில் விரக்தி உண்டாகி காரணம் இல்லாத வெறுப்பு உருவாகி கண்ணீரை வரவழைக்கும் கசந்த இந்த நினைவுகளோடு நிழலாடிக்கொண்டேன். யார் அந்தப் பையன்? எதற்காக என்னைத் தேடி வந்தான்? என்ற கேள்விக்குப் பல காலம் விடை தெரியாமல் தவித்தேன்.

இவ்வளவும் நடந்து முடிந்து பத்து வருடங்களாகிவிட்டது தான் நிதர்சனம். இந்தக் காலத்தில் எனக்குள் எத்தனையோ மாற்றங்கள். படிப்பு முடிந்து வேலை மாற்றமாகி வீடு விற்பனை முகவராகி கலியாணமாகி குழந்தை பிறந்து வீடு வாங்கி குருவாக நண்பனாக நல்ல ஆசானாக நான் இளைப்பாறும் ஒரு நிழலாக இருந்த என் தந்தையை இழந்து பரிதவித்து அந்தப் பாசத்திற்காக ஏங்கி இருந்த வேளையில் தான் இது நிகழ்ந்தது.

மார்க்கம் அன் ஸ்ரீலில் சந்திப்பிற்கு மிக அருகாமை தான் எனது அலுவலகம். 2007 ஆம் ஆண்டிலிருந்து அந்த வழித்தடங்கலில் தான் அனுதினமும் போய் வந்து கொண்டிருக்கின்றேன். பலமுறை பார்த்திருக்கின்றேன். - சாயி மந்திர் - இந்த உலகில் பார்க்கக் கூடிய எதையும் விட பார்க்க முடியாதவை அதிக ஆற்றல் வாய்ந்தவை. ஆனால் மனது பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. ஏதோ ஒரு அலட்சியம் தான். நான் பெரிதாக சிந்திக்கத் தொடங்கிய கணத்திலிருந்து எல்லாமே மாறிவிட்டது.

ஒருவர் தன்னை அர்ப்பணித்துக் கொள்ளும் வரை தயக்கம் இருக்கும். பின்வாங்குவதற்கான வாய்ப்பு இருக்கும். ஒருவர் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட கணத்தில் இறையருள் இயங்கத் தொடங்கும். முடிவெடுத்த பிறகு தொடர்ச்சியாய் பல நிகழ்வுகள் வெளிப்படும் எதிர்பாராத நிகழ்ச்சிகள் கூட ஒருவருக்கு சாதகமாய் நடைபெறும். சந்திப்புக்கள் பொருள் உதவி என்ற ஒரு மனிதன் கனவில் கூட காணாத விசயங்கள் அவன் பாதையில் வரும்!

சில மாதங்களுக்கு முன்பு தான் என் வாகனம் அந்தச் திசை நோக்கிப் பயணித்தது. தரிப்பிடத்தை விட்டிறங்கி தரிசனத்திற்காகச் சென்றேன். அப்பொழுது கூட துளி பக்தியில்லை பயமில்லை. பளிங்குச் சிலையாக ஸ்ரீரடி சாயி பாபா பட்டுப் பீதாம்பரத்தில் பளபளத்துக் கொண்டிருந்தார்.
இருப்பது பாபா தான். ஆனால் அதற்கும் அப்பால் ஏதோ ஒன்று தென்பட்டது. அது வெறும் வெள்ளைப் பளிங்கு உருவம் அல்ல. இந்த இடம் வேறு ஏதோ ஓர் இடம் என்று தோன்றிற்று.

மனதிற்குள் ஒருவகை அமைதி ஆட்கொண்டது. சகலமும் இந்த இடத்திற்கே தான் என்று கொள்ளாத ஒரு நிறைவு ஏற்பட்டது. கண்களில் ஒளி கூடியது. முகம் பொலிவுற்றது. உடம்பில் ஒரு தெம்பு தென்பட்டது. மகான்களிடம் சாதகர்கள் ஈர்க்கப்படுவது இவ்விதமே. தேடலைப் பொறுத்து மகான்கள், ரிஷிகள், முனிவர்கள் அவரவருக்கு ஏற்ப ஸ்பரிச தீட்சையோ, நயன தீட்சையோ அளிக்கிறார்கள்.

தன்னந்தனியாக எவர் துணையும்இன்றி ஏதோ மனம் போன போக்கில் போய் ஸ்ரீரடி சாயிபாபாவின் சந்நிதியில் கைகூப்பி நின்ற பொழுது உள்ளே மனம் கனிந்து கசிந்து உருகி கண்களில் நீர் வடிந்து ஆனந்த அழுகையில் திளைத்து அளவற்ற அமைதியில் உட்கார்ந்தேன். சாயி ஓம் என்னும் மந்திரத்தால் இருந்த மண்டபமும் மனமும் கட்டிப்போடப்பட்டிருந்தது.
ஸ்ரீரடியானே! உன்னிடம் இருந்து அற்புதமான ஆனந்தம் கிடைத்தது. என்னிடம் இருந்து உனக்கு என்ன கிடைக்கும்? நீ பக்கிரி! ஸ்ரீரடி சாயி பாபா! கடவுளின் உருவம்! கடவுளின் அவதாரம்! இல்லை நீயே கடவுள்! மிகப் பெரிய தபஸ்வி!

குருடனைப் பார்க்கவைப்பாய்! முடவனை நடக்கவைப்பாய்! அற்புதங்களும் அதிசயங்களும் நிறைந்தவன் நீ! உன் ஸ்ரீ சாயி சத்சரிதம் சொல்கிறதே. பகவத்கீதையா ஸ்ரீ விஸ்ணு சகஸ்ரநாமமா கிருஸ்ணனா கண்ணனா ஸ்ரீ ராமனா எனக்குள் இருக்கும் என் இஸ்ட தெய்வம் நீயா அவனா. நீ தான் அவன் அவன் தான் நீ.

நானோ பரதேசி! என் வெற்றி தோல்வி பற்றி குடும்பச்சூழல் பற்றி உடல் நிலை பற்றி அடுத்தவனின் துரோகம் பற்றி கடன்சுமைபற்றி சக்கரைவியாதிபற்றி இரத்த அழுத்தம்பற்றி எல்லாவற்றுக்கும் மேலாக அடுத்த நடவடிக்கைபற்றி ஏதோ இந்த உடலை விட்டு உயிர் போகும் வரை போராடிக்கொண்டிருக்கும் அற்பஜீவன்! அப்படியிருக்கும் பொழுது என்னை ஏன் அழைத்தாய்? என்னால் என்ன ஆகும்? நானோ தூய்மையானவன் இல்லை. புகைத்தல் மது மாமிசம் என்று ஆசாரஅனுஸ்டானங்கள் எதுவுமில்லாதவன். தந்தை இல்லாத போதும் அமாவாசையிலேயே பிரியாணிக்கு ஏங்கும் அற்ப ஆன்மா என்னுடையது.

மகான்கள் எரியும் தழல் போன்றவர்கள். நல்ல சூடு மட்டுமே நம்மீது பரவியிருக்கிற ஓரிடத்தில் அமர்ந்து கொண்டு தழலை தரிசிப்பது ஆனந்தமானது. அது நிச்சயம் அமைதியைத்தரும். ஸ்ரீரடி சாயிபாபாவிடம் போனால் மனம் அமைதியாக இருக்கிறது. ஏதோ ஒரு நிம்மதி ஏற்படுகிறது. வெளியே வந்ததும் புத்தி பேதலிக்கிறது. பிரச்சினைகள் ஆட்டம் போடுகின்றது. ஆனால் அந்த இடத்தில் எதுவுமேயில்லை. ஏன் அப்படி? பசிகூட எடுக்கவில்லையே. ஆச்சரியமாக இருக்கிறது. ஆனால் ஆழ்ந்த நம்பிக்கையோடு போகிற பொழுது ஏதோ நடக்கிறது. சரியான விதத்தில் அணுகி-னால் அமைதியாக மன்றாடினால் நிச்சயம் அவர் ஆறுதல் தருகிறார். பலதுக்கமும் அவர் சந்நிதியில் காணாமல் போகிறது. அன்பு தான் ஸ்ரீரடி சாயிபாபாவின் மிகப்பெரிய மந்திரமாகிறது.
கடவுளிடம் தன்னை ஒப்படைத்தவருக்கு எந்தக் கவலையும் இல்லை. கடவுள் அவரை நிச்சயம் காப்பாற்றுவார். எப்படிக் காப்பாற்றுவார்? அது கடவுளுக்கே மட்டும் தெரிந்த ரகசியம்!
நம்பிக்கையும் பொறுமையும் தான் அவசியம்!

**கனடா காரை கலாச்சார மன்றத்தினால் 05.05.2015 அன்று காரைநகர் ஆரம்ப பாடசாலைகளின் அடிப்படை தேவைகளை கருத்தில் கொண்டு ஒவ்வொரு பாடசாலைக்கும் வழங்கப்பட்ட 10 இலட்சம் ரூபாய்கள் நிரந்தர வைப்பில் இருந்து கிடைக்கப்பெற்ற 5ம்,6ம் கட்ட வட்டி பணத்தின் ஊடாக ஆரம்ப பாடசாலைகளின் அடிப்படை அத்தியாவசிய தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றமை தொடர்பாக பாடசாலைகளிடம் இருந்து கிடைக்கப்பெற்ற அறிக்கைகள் ஊடாக அறியப்படுகின்றது.**

கனடா காரை கலாச்சார மன்றத்தின் ஊடாக 12 ஆரம்ப பாடசாலைகளிற்கு தலா 10 இலட்சம் வீதம் நிரந்தர வைப்பில் இடப்பட்டு வழங்கப்பட்டது. இந்நிரந்தர வைப்பில் இருந்து கிடைக்கப்பெறும் வட்டி பணத்தினை பாடசாலைகளின் அடிப்படை அத்தியாவசிய தேவைகளுக்கு மட்டும் பயன்படுத்தும் வகையில் திட்டமிடப்பட்டு அதனை உறுதி செய்து கொண்டு இந்நிரந்தர வைப்பு நிதியினை பெற்றுக்கொண்டார்கள்.

அதன் அடிப்படையில் கிடைக்கப்பெறும் வட்டிப் பணத்தின் 50 விகிதமான நிதியானது நேரடியாக கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளான மேலதிக வகுப்புக்களிற்கான ஆசிரியர் வேதனம், மெல்ல கற்கும் மாணவர்களிற்கான விசேட வகுப்புக்கான ஆசிரியர் வேதனம் மற்றும் அதற்குரிய செலவீனங்ளுக்கு மட்டுமே பயன்படுத்த முடியும்.

மேலும் வங்கி வட்டியில் இருந்து கிடைக்கப்பெறும் 20 விகிதமான நிதியானது இணைப்பாட விதான செயற்பாடுகளான விளையாட்டு, தமிழ் திறன் போட்டி, பரிசளிப்பு நிகழ்வுகளிற்கு மட்டுமே பயன்படுத்த முடியும்.

மேலும் கிடைக்கப்பெறும் வட்டிப்பணத்தின் 20 விகிதம் மேலதிகமாக மாதந்தம் துண்டுவிழும் மின்சார கட்டணம் செலுத்தவும், மிகுதி 10 விகிதமான நிதி மலசலகூட சுத்திகரிப்பு, குடிநீர் தேவைகளிற்கான கொடுப்பனவுகளிற்காகவும் பயன்படுத்த முடியும் எனவும் திட்டமிடப்பட்டது. அதன் அடிப்படையில் பாடசாலைகள் ஒவ்வொன்றும் வருடத்திற்கு இரண்டு தடவைகள் ( மே 05 / நவம்பர் 05) கிடைக்கப்பெறும் வட்டி பணத்தில் ஊடாக செலவு செய்யப்படும் விபரங்களை காநைரகர் அபிவிருத்தி சபையின் ஊடாக கனடா காரை கலாச்சார மன்றத்திற்கு தெரியப்படுத்த வேண்டும் எனவும் திட்டத்தில் குறிப்பிடப்பட்டது. அதன் அடிப்படையில் 5வது தடவையாக 05.11.2017 அன்று 5ம் கட்ட வட்டிப்பணமாக 12 பாடசாலைகளிற்கு அப்பாடசாலைகளின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக 52,406.25 ரூபாய்கள் வைப்பில் இடப்பட்டன. அத்துடன் 6வது தடவையாக 05.05.2018 அன்று 6ம் கட்ட வட்டிப்பணமாக 12 பாடசாலைகளிற்கு அப்பாடசாலைகளின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக 51,062.50 ரூபாய்கள் வைப்பில் இடப்பட்டன.

நிரந்தர வைப்பில் இருந்து கிடைக்கப்பெற்ற 5ம், 6ம் கட்ட வட்டி பணத்தின் ஊடாக காரைநகர் பாடசாலைகள் அவற்றினை செலவு செய்த விபரங்கள் காரைநகர் அபிவிருத்தி சபையின் ஊடாக கனடா காரை கலாச்சார மன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. கனடா காரை கலாச்சார மன்றத்தினால் வழங்கப்பட்ட நிரந்தர வைப்பு நிதியத்தின் ஊடாக கிடைக்கப்பெற்ற வட்டி பணத்தின் ஊடாக காரைநகர் பாடசாலைகளின் செலவு விபரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

## காரைநகர் கோட்டப் பாடசாலை ஆசிரியர்,மாணவர் விபரம் - 2018

| | பாடசாலைகள் | I.D | ஆசிரியர்கள் M | F | |
|---|---|---|---|---|---|
| 1 | யா/காரை இந்துக் கல்லூரி | 1015001 | 11 | 34 | 45 |
| 2 | யா/யாழ்ரன் கல்லூரி | 1015002 | 15 | 26 | 41 |
| 3 | யா/சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம் | 1015003 | 2 | 11 | 13 |
| 4 | யா/வியாவில் சைவ வித்தியாலயம் | 1015004 | 3 | 9 | 12 |
| 5 | யா/ஆயிலி சிவஞானோதய வித்தியாலயம் | 1015005 | 1 | 4 | 5 |
| 6 | யா/மெய்கண்டான் வித்தியாலயம் | 1015007 | 2 | 4 | 6 |
| 7 | யா/காரை ஊரி அ.மி.த.க பாடசாலை | 1015008 | 1 | 5 | 6 |
| 8 | யா/பாலாவோடை இ.த.க.பாடசாலை | 1015010 | 2 | 2 | 2 |
| 9 | யா/தோப்புக்காடு மறைஞான.ச.வித்தியாலயம் | 1015011 | 1 | 4 | 5 |
| 10 | யா/வலந்தலை வடக்கு அ.மி.த.க.பாடசாலை | 1015012 | 1 | 5 | 6 |
| 11 | யா/வலந்தலை தெற்கு அ.மி.த.க.பாடசாலை | 1015013 | 1 | 5 | 6 |
| 12 | யா/வேரப்பிட்டி ஸ்ரீ கணேசா வித்தியாலயம் | 1015014 | 3 | 3 | 6 |
| 13 | யா/சுப்பிரமணிய வித்தியாலயம் | 1015015 | 1 | 5 | 6 |
| | | | 44 | 117 | 161 |

மாணவர் விபரம்

| | பாடசாலைகள் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 11R | 12S | 12/M | 12C | 12A | 12T | 13S | 13M | 13C | 13A | 13T | 13R | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | யா/காரை இந்துக் கல்லூரி | 0 | 0 | 0 | 0 | 0 | 79 | 70 | 67 | 63 | 69 | 63 | 72 | 0 | 2 | 9 | 29 | 9 | 3 | 2 | 4 | 18 | 17 | 21 | 597 |
| 2 | யா/யாழ்ரன் கல்லூரி | 23 | 24 | 27 | 23 | 30 | 58 | 69 | 66 | 74 | 55 | 56 | 55 | 2 | 3 | 3 | 23 | 0 | 0 | 3 | 3 | 21 | 0 | 18 | 636 |
| 3 | யா/சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம் | 5 | 5 | 8 | 4 | 8 | 6 | 7 | 13 | 11 | 22 | 14 | 16 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 119 |
| 4 | யா/வியாவில் சைவ வித்தியாலயம் | 4 | 5 | 6 | 5 | 5 | 13 | 8 | 10 | 10 | 14 | 15 | 10 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 105 |
| 5 | யா/ஆயிலி சிவஞானோதய வித்தியாலயம் | 10 | 14 | 6 | 8 | 10 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 48 |
| 6 | யா/மெய்கண்டான் வித்தியாலயம் | 11 | 10 | 5 | 14 | 8 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 48 |
| 7 | யா/காரை ஊரி அ.மி.த.க பாடசாலை | 27 | 28 | 23 | 20 | 22 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 120 |
| 8 | யா/பாலாவோடை இ.த.க.பாடசாலை | 1 | 3 | 0 | 2 | 2 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 8 |
| 9 | யா/தோப்புக்காடு மறைஞான.ச.வித்தியாலயம் | 13 | 12 | 10 | 7 | 8 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 50 |
| 10 | யா/வலந்தலை வடக்கு அ.மி.த.க.பாடசாலை | 8 | 12 | 16 | 12 | 14 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 62 |
| 11 | யா/வலந்தலை தெற்கு அ.மி.த.க.பாடசாலை | 25 | 9 | 26 | 7 | 21 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 88 |
| 12 | யா/வேரப்பிட்டி ஸ்ரீ கணேசா வித்தியாலயம் | 11 | 10 | 11 | 10 | 17 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 59 |
| 13 | யா/சுப்பிரமணிய வித்தியாலயம் | 17 | 22 | 22 | 22 | 17 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 100 |
| | | 155 | 154 | 160 | 134 | 162 | 156 | 154 | 156 | 158 | 160 | 148 | 153 | 2 | 5 | 12 | 52 | 9 | 3 | 5 | 7 | 39 | 17 | 39 | 2040 |

# யா/காரை மெய்கண்டான் வித்தியாலயம்
# J / KARAI MEIHANDAN VIDYALAYAM

காரைநகர் Karainagar

05.01.2017

## உத்தேச வரவு செலவு விபரம்

2018

| விபரம் | தொகை | விபரம் | தொகை |
|---|---|---|---|
| வரவு | 104,000.00 | **நேரடிக் கற்றல் 50%** | |
| | | பின்னூட்டல் வகுப்பு கொடுப்பனவு 9X3000 | 27000.00 |
| | | தரம் 5 வழிகாட்டல் செயலமர்வு 5X2000 | 10000.00 |
| | | ஆறுதல் வினாத்தாள் 3X1500 | 4500.00 |
| | | தினக்குரல் வினாத்தாள் | 1200.00 |
| | | துரித கணிதம் | 2000.00 |
| | | வாசிப்பு நூல்/ பயிற்சிப்புத்தகம் | 1500.00 |
| | | சுற்றாடல் படங்கள் பனர் | 3500.00 |
| | | காகிதாதிகள் | 2300.00 |
| | | | **52000.00** |
| | | **இணைப்பாடவிதானம் 20%** | |
| | | தமிழ்தினப்போட்டி | 4000.00 |
| | | சிறுவர் அரங்கு | 5000.00 |
| | | விளையாட்டுப்போட்டி | 6800.00 |
| | | வாசிப்புமாத போட்டி | 2000.00 |
| | | நவராத்திரி விழா | 3000.00 |
| | | | **20800.00** |
| | | **மேலதிக மின்கட்டணம் / திருத்தம் 20%** | |
| | | மின்கட்டணம் | 5000.00 |
| | | திருத்தம் - கணினி, மின்உபகரணம், போட்டோ கொப்பி, நீர்குழாய் | 15800.00 |
| | | | **20800.00** |
| | | **சுகாதாரம் / குடிநீர்** | |
| | | மலசலகூட சுத்திகரிப்பு பொருள் கொள்வனவு | 2000.00 |
| | | குடிநீர் 9X 600 | 5400.00 |
| | | பாடசாலைச் சுத்தம் | 1000.00 |
| | | முதலுதவிச் சிகிச்சைப் பொருட்கள் | 2000.00 |
| | | | **10400.00** |

K.Perinpakumar
Principal
J/Karai Meihandan Vidyalayam
[illegible]

"கற்று உயர்வோம்"

யா/வேரப்பிட்டி ஸ்ரீ கணேசா வித்தியாலயம்

**J/VERAPPIDDY SRI GANESHA VIDYALAYAM**

**KARAINAGAR**

Karaiverappiddysriganesha@gmail.com

காரை அபிவிருத்திச்சபை அரையாண்டு அறிக்கை – 2018

| திகதி | விபரம் | வரவு | செலவு | மீதி |
|---|---|---|---|---|
| 01.01.2018 | மீதி | | | 27487.75 |
| 23.01.2018 | விளையாட்டுப்போட்டி | | 20000.00 | 7487.75 |
| 08.05.2018 | வைப்புக்கான வட்டி | 51062.50 | | 58550.25 |
| 05.03.2018 | மேலதிக வகுப்பு (தை) | | 3000.00 | 55550.25 |
| 05.03.2018 | மேலதிக வகுப்பு (மாசி) | | 3000.00 | 52550.25 |
| 03.04.2018 | மேலதிக வகுப்பு (பங்குனி) | | 3000.00 | 49550.25 |
| 24.04.2018 | புலமைப்பரீட்சை மாதிரி வினாத்தாள் 17 மாணவர்களுக்கான நிழல்ப்பிரதிகள் | | 3000.00 | 46550.25 |
| 04.05.2018 | மேலதிக வகுப்பு (சித்திரை) | | 3000.00 | 43550.25 |
| 04.05.2018 | உணவு வாளி கொள்வனவு (சிவன்மாளிகை) | | 800.00 | 42750.25 |
| 04.05.2018 | காரை மத்தி மோண்பாட்டுக்கழகம் (அலுவலக ஆவண நிழல்ப்பிரதி தை -ஆனி) | | 1797.00 | 40953.25 |
| 22.05.2018 | 17 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பயிற்சிப்புத்தகம் | | 3186.00 | 37767.25 |
| 08.06.2018 | மேலதிக வகுப்பு (வைகாசி) | | 3000.00 | 34767.25 |
| 30.06.2018 | உள்ளவாறான மீதி | | | 34767.25 |

2/7/18

K.Kulasegaran
Principal
J/Verapiddy Sri Ganesha Vidyalaya
Karainagar, Jaffna.

## யா/காரை ஊரி அமெரிக்கன் மிஷன் த.க வித்தியாலயம்
## J/Karai Uri American Mission Tamil Mixed Vidyalayam

ஊரி, காரைநகர் — Uri, Karainagar

Principal : Mr.R.Sritharan
(BBM, Dip in Ed, HNDE)

Date : 15 / 05 / 2018

05.11.2017 - 04.05.2018 வரையான ஆறு மாதங்களுக்கான
வருமான செலவின அறிக்கை

| திகதி | வரவுகள் | தொகை | திகதி | செலவீனங்கள் | தொகை |
|---|---|---|---|---|---|
| 04.11.2017 | மீ/கீ/கொ/வ | 16380.70 | 07.11.2017 | கற்றல் உபகரணங்கள், காகிதாதிகள் | 3350.00 |
| 06.11.2017 | வட்டி வருமானம் | 52406.25 | 13.11.2017 | கற்றல் உபகரணங்கள், காகிதாதிகள் | 3470.00 |
| | | | 21.11.2017 | மேலதிக குடிநீர்க் கொடுப்பனவு ஐப்பசி | 420.00 |
| | | | 22.11.2017 | ஏற்றுக்கூலி கொடுப்பனவு (புத்தக இறாக்கை) | 1000.00 |
| | | | 23.11.2017 | விசேட வகுப்பு ஆசிரியர் கொடுப்பனவு (கார்த்திகை) மேனகா | 2000.00 |
| | | | 23.11.2017 | விசேட வகுப்பு ஆசிரியர் கொடுப்பனவு (கார்த்திகை) சபிதா | 2000.00 |
| | | | 28.11.2017 | ஆறுதல் பரீட்சை வினாத்தாள் | 3180.00 |
| | | | 08.12.2017 | பரிசளிப்பு விழா | 26530.00 |
| | | | 18.01.2018 | தொண்டர் ஆசிரியர் கொடுப்பனவு (மார்கழி 2017) ம.சபிதா | 2000.00 |
| | | | 18.01.2018 | தொண்டர் ஆசிரியர் கொடுப்பனவு (மார்கழி 2017) ஜெ.கமலரூபி | 2000.00 |
| | | | 22.01.2018 | மேலதிக குடிநீர்க் கொடுப்பனவு கார்த்திகை | 960.00 |
| | | | 31.01.2018 | கற்றல் உபகரணங்கள் | 1813.00 |
| | | | 02.02.2018 | கற்றல் உபகரணங்கள் | 4300.00 |
| | | | 06.02.2018 | தொண்டர் ஆசிரியர் கொடுப்பனவு (தை) ம.சபிதா | 2000.00 |
| | | | 06.02.2018 | தொண்டர் ஆசிரியர் கொடுப்பனவு (தை) ஜெ.கமலரூபி | 2000.00 |
| | | | 28.02.2018 | தொண்டர் ஆசிரியர் கொடுப்பனவு (மாசி) ம.சபிதா | 2000.00 |
| | | | 28.02.2018 | தொண்டர் ஆசிரியர் கொடுப்பனவு (மாசி) ஜெ.கமலரூபி | 2000.00 |
| | | | 03.04.2018 | மேலதிக குடிநீர்க் கொடுப்பனவு தை, மாசி | 500.00 |
| | | | 03.04.2018 | தொண்டர் ஆசிரியர் கொடுப்பனவு (பங்குனி) ம.சபிதா | 2000.00 |
| | | | 03.04.2018 | தொண்டர் ஆசிரியர் கொடுப்பனவு (பங்குனி) ஜெ.கமலரூபி | 2000.00 |
| | | | 04.05.2018 | மேலதிக குடிநீர்க் கொடுப்பனவு பங்குனி | 240.00 |
| | | | 04.05.2018 | மீதி | 3023.95 |
| | | 68786.95 | | | 68786.95 |

அதிபர்

R.Sritharan
Principal
J/Karai Uri A.M.T.M Vidyalayam
Karainagar

---

## யா/காரை ஊரி அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் வித்தியாலயம்
## J/Karai Uri American Misson Tamil Mixed Vidyalayam

003

### பற்றுச் சீட்டு

இல:-

நிதி செலுத்தியவர் :- [illegible]

காரணம் :- [illegible]

ஏற்றுக் கொண்ட நிதி (எழுத்தில்) : ரூபா [illegible]

சதம் [illegible]

(இலக்கத்தில்) : ரூபா 51,062 சதம் 50

மாதம்/தவணைக்காக :-

திகதி 08/5/18

President, Secretary, Treasurer
School Development Society
J/Karai Uri A.M.T.M. Vidyalayam
Karainagar.

வலயக்கல்விப் பணிப்பாளரின் உத்தியோகபூர்வ முத்திரை

S.Suntharasivam
Zonal Director of Education
Islands

உ
"கற்றாங் கொழுகு"

**யா/தோப்புக்காடு மறை ஞானசம்பந்த வித்தியாசாலை**
**காரைநகர்**
**J/THOPPUKKADU MARAIGNANASAMPANTHA VIDYASALAI**
**KARAINAGAR**

**திருமதி. ம.தேவராசா**
**அதிபர்.**
Mrs. M.Thevarajah SP.Maths.Trd.
Principal.
**Tele Phone : 021 321 1746 - 075 9847419**

தலைவர் / செயலாளர்
காரை அபிவிருத்திச் சபை

05.05.2018.

காரை அபிவிருத்திச் சபை வட்டிப் பணத்திற்கான கணக்கறிக்கை.

05.11.2017 – 04.05.2018 வரை.

05.11.2017ல் மீதி 23742.00
06.11.2017ல் வரவு 52406.25
மொத்தம் 76148.25

* கற்றல் செயற்பாடு
A. SIRIL 2875.00
massmedia services 1180.00
B. தயாபரன் 1650.00
5705.00

* இணைபாடவிதானம்
கந்தையா பிள்ளை 900.00
ஏகாம்பரம் 7840.00
குமல் பான்சி 1690.00
10,430.00

* சிறு திருத்தம் 2400.00
இளந்திரையன் 860.00
Jaffna Electricals 2328.00
ராஜ்குமார் ரேடர்ஸ் 953.00
கலா காட்வெயர் 800.00
S. நாதன்
7341.00

76148.25
25326.00
மீதி 50822.25.

* சுகாதாரமும் 1850.00
S. சிவகுமார்
04.05.2018ல் மீதி 50822.25.

ம.தேவராசா
MRS.M.THEVARAJAH
Principal
J/Thoppukadu Maraignanasampantha Vidyasalai
Karainagar.

யா/ சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம்

காரை அபிவிருத்திச் சபை.

காலாண்டு கணக்கு அறிக்கை – 2018 -

01.01.2018 —— 30.4.2018 வரையானது.

| வரவு | தொகை | செலவு | தொகை |
|---|---|---|---|
| மீதி. | 107781.82 | [illegible] | 3795.00 |
| | | யாழ்ப்பாணம் கல்லூரி மாணவர்களை அழைத்து [illegible] | 2000.00 |
| | | ஆ.பரிசு [illegible] செலவு | 4600.00 |
| | | அ.பரிசு [illegible] | 2700.00 |
| | | [illegible] | 4000.00 |
| | | தொண்டு ஆசிரியர் [illegible] | 8000.00 |
| | | மின்னிணைப்பு செலவு | 6000.00 |
| | | சுகாதார தொழிலாளர் சம்பளம் | 4500.00 |
| | | [illegible] செலவு | 5951.71 |
| | | கற்றல் [illegible] | 26623.00 |
| | | மொத்தச் செலவு | 68169.71 |
| | | மீதி. | 39612.11 |
| | 107781.82 | | 107781.82 |
| மீதி | 39612.11 | | |

Principal
J/Sundaramoorthy Nayanar Vid:
Karainagar.

யா/ பாலாவோடை இந்து தமிழ்க் கலவன் பாடசாலை
J/ Palavodai Hindu Tamil Mixed School

Karainagar,
Jaffna.
அதிபர்
Principal

காரைநகர்
யாழ்ப்பாணம்.
02/07/2018

தலைவர்,
காரை அபிவிருத்திச் சபை
காரைநகர்.

01.01.2018 — 30.06.2018 வரையான வரவு செலவு விபரம்

| திகதி | விபரம் | தொகை | விபரம் | தொகை |
|---|---|---|---|---|
| 1/1/2018 | மீதி | 65035.25 | கற்றல் கற்பித்தல் | 4800.00 |
| 8/5/2018 | வட்டி | 51062.50 | இணைப்பாட விதானம் | 3000.00 |
| | | | மின் கட்டணமும் திருத்தமும் | 12772.00 |
| | | | உணவு, சுகாதாரம், [illegible] | 6000.00 |
| | | | இறுதி மீதி | 89525.75 |
| | மொத்தம் | 116097.75 | | 116097.75 |

PRINCIPAL
J/Palavodai H.T.M.School
KARAINAGAR

யா/ வலந்தலை வடக்கு அ.மி.த.க. வித்தியாலயம்
காரைநகர்.

J/ VALANTHALAI NORTH A.M.T.M. VIDYALAYAM
KARAINAGAR.

06/07/2018

தலைவர்,
காரை அபிவிருத்திசபை,
காரைநகர்.

வரவு செலவு அறிக்கை

21/7/2017 இலிருந்து 6/11/2017 வரையிலானவை

| வரவு விபரம் | தொகை | செலவு விபரம் | தொகை |
|---|---|---|---|
| ஆரம்பமீதி | 40538.22 | இணையஇணைப்பு | 2260.65 |
| வரவு (வட்டி) | 52406.25 | துணைஉதவியாளர் | 4000.00 |
| | | பரிசளிப்பு விழா | 6900.00 |
| | | போட்டோபிரதி | 800.00 |
| | | மீதி | 78983.82 |
| மொத்தம் | 92944.47 | மொத்தம் | 92944.47 |

6/11/2017 இலிருந்து 31/5/2017 வரையிலானவை

| விபரம் | தொகை | விபரம் | தொகை |
|---|---|---|---|
| ஆரம்பமீதி | 78983.82 | இணையஇணைப்பு | 4237.88 |
| வரவு (வட்டி) | 51062.50 | ஆறுதல் பேப்பர் | 5602.00 |
| | | தினக்குறல் பேப்பர் (Gr5) | 6300.00 |
| | | அலகைச்சோதனைப்பேப்பர் (Gr1 – Gr5) | 11370.00 |
| | | விளையாட்டுப்போட்டி | 6132.00 |
| | | செயற்பட்டுமகிழ்வோம் (கொட்டகை) | 6882.00 |
| | | ஸ்ரேப்ளர் வாங்கியமை | 2900.00 |
| | | திருத்த வேலை | 9500.00 |
| | | மலசல கூட சுத்தம் | 3000.00 |
| | | மீதி | 74122.44 |
| மொத்தம் | 130046.32 | மொத்தம் | 130046.32 |

V. Viswanathan
Principal
J/ Valanthalai North A.M.T.M.Vid'
Karainagar

# யா/சுப்பிரமணிய வித்தியாசாலை,காரைநகர்.
# J/SUBRAMANIYA VIDYASALAI,KARAINAGAR.

Mrs.G.Arulmoly
Principal
0776618081

26/06/2018

01.01.2018 - 30.06.2018 வரையான கணக்கு விபரம்

| விபரம் | தொகை | தொகை | விபரம் | தொகை | தொகை |
|---|---|---|---|---|---|
| 01.01.2018இல் மீதி | 64821.50 | | கற்றல் கற்பித்தல் | | |
| வட்டி | 51062.50 | 115884.00 | வளவாளர்கொடுப்பனவு (JA,FE,MA) | 9000.00 | |
| | | | அறிவமுது | 8180.00 | |
| | | | ஆறுதல் | 5352.00 | |
| | | | வளவாளர்கொடுப்பனவு (MA,JU) | 6000.00 | 28532.00 |
| | | | இணைபாடம் | | |
| | | | மாணவர் சின்னம் | 1400.00 | 1400.00 |
| | | | குடிநீர்/ மின்சாரம் | | |
| | | | தண்ணீர்த்தாங்கி அமைத்தல் | 20000.00 | |
| | | | மின்மோட்டர் திருத்தம் | 9870.00 | 29870.00 |
| | | | சுகாதாரம் | | |
| | | | பாடசாலைச்சுத்தம் | 1000.00 | |
| | | | தண்ணீர் பரல் | 6888.00 | |
| | | | மலசலகூடம் சுத்திகரித்தல் | 300.00 | 8188.00 |
| | | | மீ.கீ.கொ.செ | | 47894.00 |
| | | 115884.00 | | | 115884.00 |

G.Arulmoly.
MRS.G.ARULMOLY
அதிபர்
Principal
J/Subramaniya Vidyasalai.
Karainagar

## யா/வலந்தலை தெற்கு அ.மி.த.க பாடசாலை
### காரைநகர்
### பாடசாலை அபிவிருத்திக் கணக்கு நிதிப் பற்றுச்சீட்டு

நிதி செலுத்தியவர் : தலைவர், காரை அபிவிருத்திச் சபை, காரைநகர்

........................................ தொ.பே.இல. ........................................

காரணம் : வட்டி வருமானம்

ஏற்றுக்கொண்ட நிதி எழுத்தில் ரூபா ஐம்பத்தோராயிரத்து அறுபத்து இரண்டு சதம் ஐம்பது மட்டும்

இலக்கத்தில் ரூபா 51062.50

மாதம் / தவணை / வருடத்திற்காக ........................................

திகதி : 08/05/18

**146**

பொருளாளர் ஒப்பம்

வலயக் கல்விப் பணிப்பாளரின் உத்தியோகபூர்வ முத்திரை

Zonal Education Office
Islands, Velanai

யா/வலந்தலை தெற்கு அ.மி.த.க.பாடசாலை – காரைநகர்

காரை அபிவிருத்திச் சபை

வரவு செலவு விபரம் - 2018.01.01 - 2018.05.31

| திகதி | விபரம் | காசு | வங்கி | | திகதி | விபரம் | காசு | வங்கி | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01.01.2018 | மீ.கீ.வ | | 59895 | 25 | 25.01.2018 | போட்டோக் கொப்பி – கற்றல் | | 1450 | 00 |
| | | | | | 25.01.2018 | மலசலகூடம் துப்பரவு - சுகாதாரம் | | 500 | 00 |
| | | | | | 31.01.2018 | தைப்பொங்கல் செலவு - இணைப்பாடம் | | 1350 | 00 |
| | | | | | 31.01.2018 | மீ.கீ.செ | | 56595 | 25 |
| | | | 59895 | 25 | | | | 59895 | 25 |
| 01.02.2018 | மீ.கீ.வ | | 56595 | 25 | 06.02.2018 | விறகு – சுகாதாரம் | | 3600 | 00 |
| | | | | | 06.02.2018 | லான்மாஸ்ரர் கூலி –சுகாதாரம் | | 300 | 00 |
| | | | | | 06.02.2018 | தை மாத ஆங்கில ஆசிரியர் கொடுப்பனவு – கற்றல் | | 6000 | 00 |
| | | | | | 08.02.2018 | போட்டோக் கொப்பி – கற்றல் | | 1614 | 00 |
| | | | | | 08.02.2018 | விளையாட்டுப்போட்டிச் செலவு - இணைப்பாடம் | | 6765 | 00 |
| | | | | | 28.02.2018 | மீ.கீ.செ | | 38316 | 25 |
| | | | 56595 | 25 | | | | 56595 | 25 |
| 01.03.2018 | மீ.கீ.வ | | 38316 | 25 | 12.03.2018 | போட்டோக் கொப்பி – கற்றல் | | 1891 | 00 |
| | | | | | 22.03.2018 | மலசலகூடம் துப்பரவு - சுகாதாரம் | | 850 | 00 |
| | | | | | 23.03.2018 | பாடசாலைச் சுத்தம் - சுகாதாரம் | | 250 | 00 |
| | | | | | 23.03.2018 | பிளனல் போட் - கற்றல் | | 9150 | 00 |
| | | | | | 28.03.2018 | மும்மொழி செயற்திட்டம் - கற்றல் | | 9275 | 00 |
| | | | | | 28.03.2018 | பிளனல் போட் - கற்றல் | | 7220 | 00 |

உ
"கற்றனைத் தூறுமறிவு"

# யா/ வியாவில் சைவ வித்தியாலயம்
# J/ VIYAVIL SAIVA VIDYALAYAM

கே. சுந்தரலிங்கம் SLPS-I
அதிபர்
*K. Sundaralingam* SLPS-I
Principal
Tele Phone: 021 - 492 2454, 077 6282586

காரைநகர்
KARAINAGAR

04/01/2018

தலைவர் / செயலாளர்
[illegible] அபிவிருத்திச் சபை
[illegible]

நிதிப் பயன்பாடு தொடர்பானது.

[illegible] pipe line [illegible]

| திகதி | வரவு | | செ.இல | திகதி | செலவுகள் | தொகை | |
|---|---|---|---|---|---|---|---|
| 2017.06.20 | 52406 | 25 | 01 | 24.07.17 | [illegible] | 3300 | - |
| | | | 02 | 22.06.17 | [illegible] pipe line [illegible] | 9150 | - |
| | | | 03 | 10.07.17 | O/L [illegible] | 6000 | - |
| | | | 04 | 10.07.17 | [illegible] | 3900 | - |
| | | | 05 | 10.07.17 | [illegible] | 950 | - |
| | | | 06 | 18.07.17 | [illegible] - 5 [illegible] | 3000 | - |
| | | | 07 | 24.07.17 | [illegible] | 1152 | 56 |
| | | | 08 | 06.09.17 | [illegible] | 10200 | - |
| | | | | 31.12.17 | மிகுதித் தொகை. | 14753 | 69 |
| | | | | | | 52406 | 25 |
| | 52406 | 25 | | | | | |

[illegible signature]

J/ VIYAVIL SAIVA VIDYALAYAM
KARAINAGAR

உ
"கற்றனைத் தூறுமறிவு"

# யா/ வியாவில் சைவ வித்தியாலயம்
# J/ VIYAVIL SAIVA VIDYALAYAM

கே. சுந்தரலிங்கம் SLPS-I
அதிபர்
K. Sundaralingam SLPS-I
Principal
Tele Phone: 021 - 492 2454, 077 6282586

காரைநகர்
KARAINAGAR
16.05.2018

தலைவர் / செயலாளர்
காரை அபிவிருத்திச் சபை
காரைநகர்

நிதிப் பயன்பாடு தொடர்பானது.

[illegible] எமது பாடசாலைக்கு தங்கள் சபையினால் வழங்கி வைக்கப்பட்ட நிதித் தொகையான [illegible] பின்வரும் செலவுகள் மேற்கொள்ளப்பட்டது என்பதனைத் தங்களுக்கு அறியத்தருகின்றேன்.

| வரவு | | திகதி | செ. இல | திகதி | செலவுபாடுகள் | தொகை | |
|---|---|---|---|---|---|---|---|
| 52406 | 25 | 2017.06.20 | 01 | 04.07.17 | [illegible] பாடசாலைச் சுற்றுப்புறச் சூழல் சுத்தம் செய்தமை | 5300 | - |
| | | | 02 | 22.06.17 | உள்ளக pipe line திருத்த வேலைகள் மேற்கொண்டமை, [illegible] | 9150 | - |
| | | | 03 | 10.07.17 | O/L மாணவர்களுக்கு [illegible] கருத்தரங்கு - [illegible] | 6000 | - |
| | | | 04 | 10.07.17 | கருத்தரங்கிற்கான சிற்றுண்டிச் செலவு | 3900 | - |
| | | | 05 | 10.07.17 | கருத்தரங்கிற்கான வளவாளர் [illegible] | 960 | - |
| | | | 06 | 18.07.17 | தரம் - 5 [illegible] கருத்தரங்குச் செலவு | 3000 | - |
| | | | 07 | 24.07.17 | [illegible] | 1152 | 56 |
| | | | 08 | 06.09.17 | [illegible] | 10200 | - |
| | | | 09 | 07.03.18 | [illegible] | 560 | - |
| | | | 10 | 18.04.18 | [illegible] புத்தகம் அச்சிட்டமை | 6000 | - |
| | | | 11 | 27.04.18 | mobile [illegible] | 1000 | - |
| | | | | 16.05.18 | மீதமுள்ள இருப்பு நிதி. | 7253 | 69 |
| 52406 | 25 | | | | | 52406 | 25 |

"நன்றி"

K. Sundaralingam
K.Sundaralingam
PRINCIPAL
J/VIYAVIL SAIVA VIDYALAYAM
KARAINAGAR

# யா/யாழ்ற்ரன் கல்லூரி –காரைநகர்

## J/YARLTON COLLEGE - KARAINAGAR

PRINCIPAL
Mr.T.Mathivathanan
B.A Dip. in Edu SLPS

T.P No: 0212211732

e-mail : yarltoncollegekarai@gmail.com

10.05.2018

### காரை அபிவிருத்திச் சபை வரவு செலவு விபரம்
### ஆரம்பப் பிரிவு

| திகதி | செலவு விபரம் | தொகை |
|---|---|---|
| 20/11/2017 | புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான Medal கொள்வனவு | 4800.00 |
| 22/11/2017 | புலமைப் பரிசில் பரீட்சை கௌரவிப்பு விழா Photograph | 2400.00 |
| 22/11/2017 | புலமைப் பரிசில் பரீட்சை கௌரவிப்பு விழா சிற்றுண்டி | 4000.00 |
| 23/11/2017 | புலமைப் பரிசில் பரீட்சை கௌரவிப்பு விழா பொருட் கொள்வனவு | 3340.00 |
| 06/12/2017 | புலமைப் பரிசில் பரீட்சை கௌரவிப்பு விழா Certificate கொள்வனவு | 460.00 |
| 06/12/2017 | புலமைப் பரிசில் பரீட்சை கௌரவிப்பு விழா Invitation கொள்வனவு | 1100.00 |
| 06/12/2017 | புலமைப் பரிசில் பரீட்சை கௌரவிப்பு விழா Cake கொள்வனவு | 979.00 |
| 06/12/2017 | புலமைப் பரிசில் பரீட்சை கௌரவிப்பு விழா Generater வாடகை | 3500.00 |
| 06/03/2018 | ஆரம்பப் பரிவு விளையாட்டுப் போட்டி கொட்டகை கொடுப்பனவு | 1000.00 |
| 23/03/2018 | ஆரம்பப் பரிவு விளையாட்டுப் போட்டி Roll ,Cake கொடுப்பனவு | 1900.00 |
| 26/04/2018 | தரம் 01 கால்கோள் விழா பரிசுப்பொருள் கொள்வனவு | 1150.00 |
| 08/05/2018 | தரம் 5 புலமைப் பரிசில் தொடர் பரீட்சை தினக்குரல் | 9000.00 |
| 08/05/2018 | திருத்த வேலை [illegible] | 15000.00 |
| | **மொத்தச் செலவு** | **48629.00** |
| | வரவு | **52406.25** |
| | மீதி | **3777.25** |

..............................
அதிபர்

T.MATHIVATHANAGN
Principal
J/Yarlton College
Karainagar

யா/ ஆயிலி சிவஞானோதய வித்தியாலயம்

காரை அபிவிருத்திச் வட்டி நிதிக்கான

1ம் 2ம் தவணைக்கான கணக்கறிக்கை

காலம் :- 01.01.2018 — 31.05.2018

| திகதி | வரவு | தொகை | திகதி | செலவு | தொகை |
|---|---|---|---|---|---|
| 31/12/2017 | மீதி | 96546.25 | 10/1/18 | S.Sungarasa | 1600.00 |
| 08/05/2018 | உதவிப்பணம் | 51062.50 | 23/1/18 | New golden star | 890.00 |
| | | | 29/1/18 | Atul styles | 2850.00 |
| | | | 19/2/18 | Olympiasports | 2920.00 |
| | | | 19/2/18 | T.Arani | 3000.00 |
| | | | 20/3/18 | Kayathiri hardware | 7100.00 |
| | | | 23/3/18 | olympia sports | 1210.00 |
| | | | 29/3/18 | Jeyaluksan Fancy | 4850.00 |
| | | | 31/5/18 | H.A.multi shop | 1800.00 |
| | | | 31/5/18 | Aarani | 3000.00 |
| | | | 31/5/18 | Aaram fancy house | 5737.00 |
| | | | | | |
| | | | | மீதி | 115651.75 |
| | | 147608.75 | | | 147608.75 |

31/05/2018 மீதி 115651.75

Principal
J/Ayili Sivagnanothaya Vidyalayam
Karainagar

யா/காரை ஊரி அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் வித்தியாலயம்

J/Karai Uri American Misson Tamil Mixed Vidyalayam

பற்றுச் சீட்டு

இல:- 003

நிதி செலுத்தியவர் :- காரை அபிவிருத்தி சபை

காரணம் :- [illegible]

ஏற்றுக் கொண்ட நிதி (எழுத்தில்) : ரூபா ஐம்பத்தொராயிரத்து அறுபத்து இரண்டு

சதம் ஐம்பது

(இலக்கத்தில்) : ரூபா 51062 சதம் 50

மாதம்/தவணைக்காக :-

திகதி 08/5/18

President / Secretary / Treasurer
School Development Society
J/Karai Uri A.M.T.M. Vidyalayam
Karainagar.

வலயக்கல்விப் பணிப்பாளரின் உத்தியோகபூர்வ முத்திரை

S.Suntharasivam
Zonal Director of Education
Islands

# ஈழத்துச் சைவத்தமிழ் இலக்கியப் பாரம்பரியத்திற்குப் பெரும்புகழ் சேர்த்த காரைநகர் பிரம்மஸ்ரீ கார்த்திகேயப் புலவர் (23.03.1819 – 22.09.1898)



**காரைநகர் கார்த்திகேயப் புலவர் அவர்களின் 120 ஆவது ஆண்டு நினைவு தினத்தையொட்டி (22.09.2018) இக்கட்டுரை இம்மலரில் பிரசுரிக்கப்படுகின்றது.**

- திருமதி.கிருஷ்ணவேணி சோதிநாதன் B.Sc -

ஈழத்து தமிழ் இலக்கிய வரலாறு சங்கத் தமிழ்ப் புலவரான ஈழத்து பூதந்தேவனார் காலந்தொட்டு ஏறத்தாழ 2000 ஆண்டு கால பழமை வாய்ந்தது. 'ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றின் வளர்ச்சியில், 1835-1929க் காலகட்டமே சிக்கல் மையப்பட்ட காலமென்று கொள்ளப்படத்தக்கதாகும் என்று பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் குறிப்பிடுகின்றார். ஏனெனில் இக்காலத்தில் ஆங்கிலேயர் ஆட்சியும், கிறித்தவ சமயமும் ஈழத்தில் சமூகம், அரசியல், பொருளாதாரம் ஆகிய கட்டமைப்புக்களில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தியிருந்தன.

முத்துக்குமாரக் கவிராயர், ஆறுமுகநாவலர், சங்கர பண்டிதர் ஆகியோர் ஆங்கிலேயர் ஆட்சியில் கத்தோலிக்க சமயத்தின் மாயப் பரப்புரைக்கு மக்கள் மயங்கி வருந்தாது தடுத்தனர் என்றும், இவர்களின் கண்டனக் குரல்களால் கிறித்தவ மதக் கொள்கைகள் வலுவிழந்து தடுமாறியது என்றும் பின்வரும் செய்யுளில் மதுரை வித்துவான் சபாபதி முதலியார் கூறியுள்ளார்.

**முத்துக் குமார கவிராசா சேகரன் மொய்யமரிற்**
**றத்தித் தட்க்குண்டு நாவலர் தாவச் சவிமடித்து**
**சித்தங் கெடவுட றாமொத ரேந்தரன் சிதைந்தபைபிள்**
**செத்துக் கிடக்குது பார்சிவ சங்கரன் றெம்முனைக்கே**

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் 'எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார் இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே என்று இதனால்தான் பின்னாளில் பாடியிருக்கிறாரோ என்று தோன்றுகின்றது.

இந்த வகையில், 19ஆம் நூற்றாண்டானது ஈழத்து இலக்கிய மரபு வளர்ச்சியில் ஒரு

திருப்புமுனையாக பிற்கால இலக்கியங்களுக்கு வழிகாட்டிய வகையிலும் அவற்றுக்கான அடித்தளமாக அமைந்த நிலையிலும் ஈழத்து இலக்கிய வரலாற்றின் பொற்காலமாகத் திகழ்கின்றது.

இற்றைக்கு இரு நூற்றாண்டுகளுக்கு முன் காரைநகர் களபூமிப்பதியில் அவதரித்த வரகவி பிரம்மஸ்ரீ கார்த்திகேயப் புலவர் அவர்கள் தாம் பிறந்து வாழ்ந்த பதியினையும் தாம் வழிபாடு செய்த குல தெய்வங்களின் தெய்வீகச் சிறப்புக்களைப் பாடியும், மக்களை மகிழ்வூட்டும் நாடகங்களை ஆக்கியும், சைவத் தமிழ் இலக்கிய உலகுக்கு அரிய பல படைப்பிலக்கியங்களை அளித்து ஈழத்து இலக்கிய வரலாற்றின் பொற்காலத்திற்கு வலுவூட்டிய பெருமையைப் பெறுகின்றார் என்றால் மிகையாகாது. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் காலத்தில் வாழ்ந்த பிரம்மஸ்ரீ கார்த்திகேயப் புலவர் அவர்கள் நாவலர் பெருமானின் குருவாகிய இருபாலை சேனாதிராய முதலியாரைத் தமக்கும் குருவாகப் பெற்றவர். அந்தணர் குலத்தில் உதித்த புலவர் அவர்களின் தந்தையாரான முருகேசையர், பூட்டனாராகிய சுப்பையர் ஆகியோரும் சிறந்த புலவர்களாக முத்தமிழ் வித்தகர்களாக விளங்கியவர்கள். இயற்றமிழ் நூல்களாகத் தன்னை யமக அந்தாதி, தன்னை நாயகரூஞ்சல், குருசேத்திர நாடகம் ஆகிய நூல்கள் புலவர் அவர்களின் தந்தையாரான முருகேசையர் அவர்களாலும், நல்லை நாயக நான்மணிமாலை, காரைக் குறவஞ்சி என்னும் இரண்டு பிரபந்தங்கள் பூட்டனாராகிய சுப்பையர் அவர்களாலும் இயற்றப்பட்டவையாகும்.

கார்த்திகேயப் புலவர் அவர்களுக்கு ஐந்து வயதில் ஏடுதொடக்கப்பட்டு ஊரில் வாழ்ந்த சுவாமி நாத தேசிகரிடம் சங்கத மொழியினையும் தந்தையாராகிய முருகேசையரிடம் நீதிநூல்களையும், புராணங்களையும் கற்று வந்தார். பன்னிரண்டாவது வயதில் தந்தையாரிடம் கந்தபுராணத்தின் தாரகன் வதைப்படலத்திலே வரும் பாடலை இசையோடு பாடுவதில் இடர்ப்படவே தந்தையார் தண்டித்தமையினால் ஒரு வருடகாலம் புலவரின் கல்வி தடைப்பட்டது.

புலவரின் பாட்டியாராகிய இலட்சுமி அம்பாளின் துணையுடனும் தங்கள் சொந்தமாகிய திக்கை நிலத்து முருகப்பெருமானை வழிபட்டு வந்தமையின் பயனாகவும் பரம்பரைச் சைவவேளா-ளரும் பெருங்கல்விமானுமாகிய சண்முக உபாத்தியாயரிடம் தமது கல்வியைத் தொடர்ந்த புலவர் தமது பதினைந்தாவது வயதில் ஏட்டில் அழகுற எழுதும் பயிற்சியுடையவரானர். 1886 ஆம் ஆண்டிலே இலண்டன் மாநகரத்தில் நடைபெற்ற சர்வதேச பொருட்காட்சிச்சாலைக்கு இவரால் ஏட்டில் எழுதப்பட்ட திருக்குறள், நாலடியார் என்பன ஊர்காவற்றுறை நீதிபதி கு.கதிரைவேற்பிள்ளை அவர்கள் மூலம் அனுப்பி வைக்கப்பட்டு பார்வைக்கு வைக்கப்பட்டுப் பாராட்டுப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

அக்காலத்தில் காரைநகர் களபூமி குறிச்சியில் திக்கை மற்றும் தன்னை திருப்பதிகள் அமைந்துள்ள தெய்வீகச் சூழலில் அந்தணர் குடியினர் வாழ்ந்து வந்தார்கள் என்று வாய்மொழிச் செய்திகளினூடாக அறியக் கிடைக்கின்றது.

புலவரின் தந்தையார் முருகேசையர் இயற்றத் தொடங்கிய தன்னை யமக அந்தாதியின் எழுபது செய்யுள்கள் எழுதியபின் தந்தையார் நோயுற்றமையினால் முற்றுப்பெறாமல் இருந்த

அந்தாதியின் இறுதி முப்பது செய்யுள்களையும் கார்த்திகேயப் புலவர் தமது இளவயதிலேயே பாடி முடித்தமையினால் இவரை ஒரு வரகவியெனப் போற்றி அதிசயித்தனர். இவர் யாத்த முதலாவது செய்யுள் பின்வருமாறு:

**மணிக்கோ கனகத் தருநிதி யாரும் வணங்கிடமா**
**மணிக்கோ கனகத் தருமாக வன்பர்க்கு வைப்பவனீ**
**மணிக்கோ கனகத் தருவகை யோடருண் மைந்தநன்கார்**
**மணிக்கோ கனகத் தரும்புகழ்த் தென்றன்னை மன்னவனே**

புலவர் அவர்கள் ஒரு புராண பிரசங்க சபைக்குச் சென்றபோது பிரசித்திபெற்ற கங்காதர சாஸ்திரியார் அவர்கள் 'புலவரே வருக' என அழைத்து மரியாதை செய்தார். அன்றிலிருந்து இவர்களை புலவர் என அழைத்தனர். அக்காலத்தில் நெல் தானியங்களை மதிக்கவும், அரச அலு-வலாகவும் காரைநகருக்கு வந்து முருகேசையர் வீட்டில் தங்கும் இருபாலைச் சேனாதிராய முதலியாரிடம் புலவர் அவர்கள் இராமாயணம், பாரதம், காரிகை, நன்னூல் முதலாம் நூல்களை பாடங்கேட்டார். களபூமிக் குறிச்சியிலேயிருந்த உடையார் பரமநாதர்இ மணியகாரன் காசிநாதர்இ இருமரபுயர்ந்த மானாமுதலியாரின் வழித்தோன்றலாகிய பேரம்பலம் செட்டியார் கந்தர் ஆகிய மதிப்புமிகு செல்வந்தர்களின் விருப்பப்படி தமது தந்தையார் பாடிவைத்திருந்த குருசேத்திர நாடகத்தைத் திருத்தியும், புதுக்கியும் 1844 ஆம் ஆண்டில் அரங்கேற்றி மகிழ்வித்தார். ஊர்ப் பெரியவர்களின் விருப்பப்படி சூரபன்மன் நாடகம், சந்திரவண்ணன் நாடகம் என்பவனவற்றையும் எழுதிப் பாடி அரங்கேற்றினார்.

கார்த்திகேயப் புலவர் 1847 ஆம் ஆண்டில் தமது இருபத்தெட்டாவது வயதில் காரைநகரில் பிரசித்தி பெற்ற மகா வைத்தியரும் புராணப் பிரசாரகரும் கனகசபாபதிக் குருக்கள் மரபைச் சேர்ந்தவருமாகிய அரங்கநாத பண்டிதரின் செல்வமகள் கமலாம்பாளை விதிப்படி திருமணம் முடித்தார்.

கார்த்திகேயப் புலவர் வாழ்ந்து வந்தகாலத்திலே காரைநகரிலே கிறித்தவப் பாதிரிமார் வீடு வீடாகச் சென்று தமது கிறித்தவ மதத்தை பரப்புரை செய்து வந்தனர். அந்தணர்களைப் பரிகசித்து பாடல்களும் பாடிப் போதனை செய்தனர். அப்பாடல்களில் ஒன்று வருமாறு:

**பிறந்தபோது பூணுநூல் குடுமியும் பிறந்ததோ**
**பிறந்துடன் பிறந்ததோ பிறங்கு நூற்களங்கெலாம்**
**மறைந்த நாலுவேதமும் மனத்து ளேயுதித்ததோ**
**நிலம் பிளந்து வானிழிந்து நின்ற தென்ன வல்லிரே**

இப்பாடலைக் கேள்வியுற்ற கார்த்திகேயப் புலவர் எதிர்பாடலாக,

**உதித்தபோது சட்டைதொப்பி தானுங் கூடவுற்றவோ**
**மதித்த ஞானஸ்தானமும் வலிய வந்து நேர்ந்ததோ**
**விதித்த பைபிளிவானதுங் கண்மெய்யுளத் துதித்தவோ**
**கதித்த பேச்சைவிட்டனாதி கடவுளைக் கருதுமே.**

என்று பாடி நகைத்தார்.

இத்துடன் நின்றுவிடாது, சைவசமயத்தவர் சிலர் கிறித்தவராக மதம் மாறுவதைக் கண்டு சீறியெழுந்த புலவர் மூன்று சூத்திரங்களையும் 150 விருத்தங்களையுமுடைய 'கிறித்தவமத குடாரம்' என்னும் நூலை வெளியிட்டு கிறித்தவ மிசனரிமாரின் கொட்டத்தை ஓரளவு அடக்கி சைவசமயத்தைக் காத்து நின்றார்.

அந்நாளிலே சைவத்தமிழ்க் கல்வி முறை நலிவுற்று வருவதனைக் கண்ட அந்தணர்களும், ஊரவர்களும் ஒரு பாடசாலையை அமைத்து பிள்ளைகளுக்கு கல்வி கற்பிக்க வேண்டும் என்று புலவரிடம் வேண்டிக்கொண்டனர். அதற்கு இசைந்து 1852 ஆம் ஆண்டு தை மாதம் ஒரு வித்தியாசாலையை அமைத்து சைவ சமயத்தையும், தமிழையும் பிள்ளைகளிடம் வேதனம் பெற்று கற்பித்து வந்தார். வித்தியாசாலையை அமைப்பதற்கு புலவருக்கு பலவழிகளிலும் உதவியவர் புலவரின் பெரியதந்தையின் மகனாகிய கார்த்திகேய சாத்திரியாராவார். மு.குமாரசுவாமி ஐயர், மு.சீனிஐயர், கா.வேதக்குட்டி ஐயர், இராமசுவாமி ஐயர், கா.மார்க்கண்டேய ஐயர், சி.கந்தப்பபிள்ளை, அ.கணபதிப்பிள்ளை, அ.சோமநாதர், இ.சண்முகம், பொ.நாரணபிள்ளை, வே.அம்பலவாணன் முதலானோரும் புலவரின் புதல்வர்களாகிய நாகநாதையர், நடராசக் குருக்கள், சிவசிதம்பர ஐயர் ஆகியோரும் புலவரிடம் கல்வி கற்ற மூத்த மாணவர்களாவர்.

1864 ஆம் ஆண்டு தைமாதம் கார்த்திகேயப் புலவர் தமது மாணக்கர் சிலருடன் இராமேஸ்வரம், திருப்பெருந்துறை, உத்தர கோசமங்கை, மதுரை, திருப்பரங்குன்றம் முதலிய புண்ணிய தலங்களுக்கு யாத்திரை செய்து வழிபட்டுத் திரும்பினார். இந்நாளில் புலவர் அவர்கள் தாம் சிலகாலம் அர்ச்சகராக இருந்து வழிபட்டு வந்த களபூமி திக்கை முருகக் கடவுள் மீது 'திக்கைத் திரிபந்தாதி' என்ற அந்தாதி பாடினார். இதே காலத்தில் சண்டிலிப்பாயிலிருந்த தமது மைத்துனராகிய கார்த்திகேயக் குருக்களிடம் சுத்தவாதுளம், மிருகேந்திரம், பௌஷ்கரம் முதலிய நூல்களுக்குப் பாடங்கேட்டனர். புலவரின் மைத்துனர் ஸ்ரீமத் கார்த்திகேயக் குருக்கள் அவர்கள் வேதாரணியத்திலே பன்னிரண்டு ஆண்டு காலம் தர்க்கம், மீமாம்சை, வியாகரணம், ஆகமம் முதலியவற்றிற்குப் பாடங்கேட்டு மிக்க பாண்டித்தியம் பெற்றவர். தம்முடைய இறுதிக்காலத்திலே தமது ஆகமங்கள் சிலவற்றைப் கார்த்திகேயப் புலவருக்கு உபதேசித்தார்.

கார்த்திகேயப் புலவர் அவர்கள் சிதம்பரம் முதலான தலங்களை வழிபட விரும்பி அங்கே சென்று தங்கியிருந்தபோது(1877) தாம் எந்நாளும் மறவாது துதித்து வணங்கும் சிதம்பர நடராசர் மீது காதல் கொண்டு 'திருத்தில்லைப்பல் சந்தமாலை' என்னும் பிரபந்தத்தைப் பாடினார்.
யாழ்ப்பாணத்திலே தோன்றி வெளிவரத் தொடங்கிய (1875) 'இலங்கை நேசன்' என்ற செய்தி நாளிதழுக்கு பலரும் சிறப்புக் கவி எழுதினர். புலவரையும் சிறப்புக் கவி எழுதும்படி பலரும் கேட்டுக் கொண்டதற்கிணங்க, புலவர் யாத்த "நூற்றெட்டுச் சீர்கழிநெடிலாசிரிய விருத்தம்" என்ற கவிதை இலங்கை நேசனின் சித்திரை 1877 இதழில் வெளியாகியிருந்தது. அக்கவியின் ஆழமான கருத்து அனைவரையும் வியப்பிலாழ்த்தி புலவரின் மதிநுட்பத்தை அனைவரும் அறிய வைத்தது.

அக்காலங்களிலே மிஷனரிமார் கிறித்தவ சமயத்தைப் பரப்பும் நோக்கில் காரைநகரில் பல பாடசாலைகளை அமைத்து வேதனமின்றி கற்பிக்கத் தொடங்கியமையினால் புலவரிடம் கற்கும்

மாணவர்களின் எண்ணிக்கை குறையலாயிற்று. இருந்தாலும் பாரதம், கந்தபுராணம் போன்ற நூல்களுக்கு பொருள் கேட்டுப் படிக்கும் மாணவர்கள் தொடர்ந்து புலவரிடம் கற்றுவந்தனர். புலவர் அவர்கள் மருத்துவம், சோதிடம் ஆகிய தொழில்களிலும் தலைசிறந்து விளங்கினார்.

1880 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 'உதயபானு' என்னும் இதழைத் தொடங்கினார்கள். அதற்கு புலவர் எழுதிய கவிகள் மிகச் சிறப்புடையவை. சிலேடை, மடக்கு, இஷ்டவுத்தரம், யமகம் போன்ற பாக்களை எடுத்த எடுப்பில் இயற்றும் திறனுடையவராயிருந்தார். பத்திரிகைக்கும் பானுவுக்கும் புலவர் செய்த சிலேடையை பின்வரும் செய்யுளில் காணலாம்.

தாரகை கண்மறையத் துன்மதிசாய்ந்தோடத்
　　தடுத்தெதிர்வஞ்சரை யழித்துத் தங்குமந்த
காரவிருளினையோட்டி வெளியதாக்கிச்
　　சந்தேகமன்றி யுறுபொருளையாரு
மோரவே தெரிந்துண்மையினை யுணர்த்தி
　　யுலக மெங்குஞ் சென்றெவரு முவந்து போற்றச்
சேருதயபானு வினையவனிமீதிற்
　　றிகழு முதயபானுவெனச் செப்பலாமே

கார்த்திகேயப் புலவர் 'விதானமாலை' என்னும் சோதிட நூலைத் திருத்தி உரையில்லாத பாட்டுகளுக்கு உரை எழுதி 1881 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் வெளியிட்டார். விதானமாலைக்கு சி.வை.தாமோதரம்பிள்ளை, சதாவதானம் சுப்பிரமணிஐயர் ஆகியோர் சிறப்புக்கவி செய்திருக்கின்றார்கள்.

திருகோணமலையில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் கோணேசர் பெருமானையும் மாதுமையம்மாளையும் பற்றிக் கூறும் தலபுராணம் தட்சிண கைலாச புராணம் ஆகும். ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் யாழ்ப்பாணத்து நல்லூர் மகாவித்துவான் சிங்கைச் செகராசசேகரன் அவர்களால் எழுதப்பட்டது. கார்த்திகேயப்புலவர் அவர்கள் தமது அறுபத்தொன்பதாவது வயதில் 1887 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் அவரது மகன் கா.சிவசிதம்பர ஐயரினால் பதிப்பிக்கப்பட்ட தட்சிண கைலாசபுராணத்தின் ஏட்டுப்பிரதியை வேறு பிரதிகளுடன் ஒப்பிட்டு பரிசோதிப்பதற்கு உதவினார். இந்நூலின் முன்பக்கத்தில் பின்வருமாறு குறிப்படப்படுகின்றது. "யாழ்ப்பாணத்து காரைநகர் இயற்றமிழ் போதனாசிரியர் கார்த்திகேய ஐயர் அவர்களினால் பலபிரதிகள் கொண்டு பரிசோதிக்கப்பட்டு அவரின் புத்திரர் கா.சிவசிதம்பரஐயரினால் கலாரத்நாகர அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது. (1887)"

'காரைநகர்' என்ற இடப்பெயர் 12.9.1923 தொடக்கம் ஆட்சியாளர்களின் அங்கீகாரத்துடன் வழங்கி வருகின்றபோதிலும், முதன்முறையாக 1887 இல் தட்சிண கைலாச புராணம் பதித்த கா.சிவசிதம்பர ஐயரினால் மேற்படி பக்கத்தில் குறிப்பிடப்படுவதைக் காணலாம்.

கார்த்திகேயப் புலவரினால் இயற்றப்பட்ட திண்ணபுரத் திரிபநதாதியின் கீழ்வரும் காப்பு பாடலிலும் ‘காரைநகர்’ என்ற பெயர் இடம்பெறுவதைக் காணலாம்.

**திருவேளை யட்டவன் காரைநகருறுந் திண்ணபுரத்**
**தொருவேழை பங்கினன் மேலொரந் தாதியையோதுதற்குப்**
**பெருவேளை பூண்டு பிரார்த்திக்கு மன்பர் பிறவியெனுங்**
**கருவேழையுந்துடைத்தாளுங் கணபதி காப்பதுவே**

அக்காலத்தில் தொடங்கப்பட்ட அறிவியல் இதழாகிய ‘விஞ்ஞான வர்த்தனி’ என்ற இதழுக்கும் கார்த்திகேயப் புலவர் பல சிறப்புப் பாக்களை இயற்றியிருந்ததோடு ஞானிக்கும் விஞ்ஞானிக்கும் சிலேடையாகவும் ‘மயக்கந் தீராகம நூல் யாவும் பார்த்து.. ‘ என்று தொடங்கும் செய்யுளில் பாடியிருந்தார்.

புலவர் தனிப்பாக்கள் யாப்பதிலும், சோதிட, மருத்துவ விடயங்களிலும், சிந்தாந்த ஆராய்ச்சியிலும் இல்லாத ஏடுகள் வாங்கி எழுதுவதிலும் தமது வயோதிப காலத்தைக் கழித்து வந்தார். இக்காலத்தில் தமிழ்ப் பதிப்புத்துறையின் முன்னோடியும், இதழாசிரியரும், ஈழத்தமிழானாக இருந்தும் தமிழகத்தில் பட்டப்படிப்பினை மேற்கொண்டு புதுக்கோட்டையில் உயர் நீதிமன்ற நீதிபதியாகப் பணியாற்றியவரும், இராவ்பகதூர் விருதுபெற்றவரும், பாண்டிய மன்னனின் கைகளுக்கே அகப்படாமல் இழக்கப்பட்டதாகக் கருதப்பட்ட தொல்காப்பியத்தை அர்ப்பணிப்புடன் தேடிக்கண்டுபிடித்து பதிப்பித்தவருமாகிய சி.வை.தாமோதரம்பிள்ளை அவர்கள் சென்னையிலிருந்து யாழ் கொழும்புத்துறையில் வந்து தங்கிருந்தபோது புலவர் அவர்களைச் சந்தித்து நட்புடன் அளவளாவிக்கொண்டிருந்தபோது ‘கற்றைச் சடையுடைத் தேவே கயிலைக்கறைக் கண்டனே’ என்னும் ஈற்றடியைக் கொடுத்து முதல் மூன்று அடிகளையும் பாடி கலித்துறைச் செய்யுளை முடிக்குமாறு புலவரை வேண்டவே

**எற்றைக்கு முன்னடிபேணுவரமே யெனக் கருள்வை**
**பற்றைக் களைந்திடு ஞானியர் போற்றும் பழம் பொருளே**
**பெற்ற முகைத்திடு மங்கையொர் பங்கபிறையுலவு**
**கற்றைச் சடையுடைத் தேவேயிலைக் கறைக்கண்டனே**

என்று பாடி முடித்தார். இதனைக் கேட்ட பிள்ளையவர்கள் வியப்படைந்து முன்னரிலும் அதிகநேசம் பாராட்டி மகிழ்ந்தனர்.

புலவர் தமது வாழ்நாளின் இறுதிக்காலத்தை வீணடிக்காது இறைவனைப் பாடித்துதிப்பதிலும், பிரபந்தங்கள் இயற்றுவதிலும் காலத்தைக் கழித்தார். திருப்போசை வெண்பா (கருங்காலி முருகப்பெருமான் மீது பாடப்பட்டது), நகுலேசரியமக அந்தாதி, வண்ணைத் திரிபந்தாதி, திண்ணைபுரத் திரிபந்தாதி, முதலிய பிரபந்தங்களைப் பாடினார்.

புலவர் அவர்கள் தமது எண்பதாவது வயதிலே விளம்பி வருடம் புரட்டாதி மாதம் எட்டாம் திகதி (22.09.1898) அன்று நெற்றியில் நீறணிந்து சிவபெருமானை எண்ணியவாறு 'எண்ணுகேனென் சொல்லியெண்ணுகேனோ' என்னும் பதிகத்தையே யோதும்படிசொல்லி நடராசப் பெருமானின் திருவடி நிழலையடைந்தார். சி.வை.தாமோதரம்பிள்ளை, அ.வேன்மயில்வாகனச் செட்டியர், திருமயிலை வித்துவான் சண்முகம்பிள்ளை ஆகியோர் மற்றும் புலவரின் புதல்வர்கள் மூவரும் புலவரின் மறைவுக்கு சரமகவிகள் பாடியள்ளனர்.

நற்றமிழ் அன்னைக்கு நாளெல்லாம் நல்லணி புனைந்து அழகு செய்த நறுந்தமிழ் புலவர்கள் வரிசையிலும், ஆங்கிலேயர் ஆட்சியில் சைவசமய பாரம்பரியத்தைக் காத்துநின்ற ஈழத்து வீரசைவர்கள் வரிசையிலும் காரைமாகரக் களபூமிப் பதியில் அவதரித்து வாழ்ந்து தேன் இனிய தமிழில் மேன்மை கொள் சைவசமயத்தைப் போற்றிப் பாவாயிரம் பாடிய கார்த்திகேயப்புலவர் அவர்களுக்கு ஒரு தனிச்சிறப்பிடம் உண்டு. அந்தவகையில் கார்த்திகேயப் புலவர்கள் திருநாமத்தையும், அவர் யாத்த அரிய சைவத்தமிழ் இலக்கியங்களையும் பேணிப் போற்றி வாழ்த்தி வணங்குவது நம் கடனாகும்.

**காரை அன்னை பரவுங் கவிமணி**
**ஏரை யுற்றநல் ஏந்தல் வேதியன்**
**சீரை யுற்றுயர் கார்த்தி கேயன்றன்**
**பேரை நித்தலும் பேணி வழுத்துவோம்**

அண்மைக்காலத்தில் வாழ்ந்து தமிழுக்கும் சைவத்துக்கும் பணி செய்து மறைந்த சிவத்தமிழ் வித்தகர், பண்டிதமணி, கலாநிதி.க.வைத்தீசுவரக் குருக்கள் அவர்களின் தாய்வழிப்பூட்டனே கார்த்திகேயப் புலவர் ஆவார் என்பது குறிப்பிடத்தக்கது.

**குறிப்பு: இக்கட்டுரையில் கார்த்திகேயப் புலவர் அவர்களின் வரலாறு தொடர்பான தகவல்களுக்கு ஆதாரங்களாக அமைந்த நூல்கள்:**

1. புலவரின் இளைய மகனும் மதுரை தமிழ்ச் சங்க வித்துவானும் சைவசமயச் சொற்பொழிவாளருமாகிய கா.சிவசிதம்பர ஐயர் எழுதிய பிரம்மஸ்ரீ மு.கார்த்திகேயப் புலவர் சரித்திரம் (1908)
2. புன்னாலைக் கட்டுவன் வித்துவான் பிரம்மஸ்ரீ சி.கணேச ஐயர் எழுதிய ஈழநாட்டு தமிழ் புலவர் சரிதம் (1939)
3. கலாநிதி ஆ.சதாசிவம் அவர்கள் எழுதிய ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம் (1966)
4. தென்புலோலியோர் மு.கணபதிப்பிள்ளை அவர்கள் எழுதிய ஈழநாட்டின் தமிழ்ச் சுடர்மணிகள் (1967)
5. வித்துவான் F.X.C நடராசா அவர்கள் எழுதிய காரைநகர் மான்மியம் (1971)
6. சிவஸ்ரீ க.வைத்தீசுவரக்குருக்கள் எழுதிய காரைநகரில் சைவசமய வளர்ச்சி (1982)
7. காரைநகர் தமிழ் வளர்ச்சி கழகம் வெளியிட்ட திக்கைத் திரிபந்தாதி (1991)
8. கனடா சைவ சித்தாந்த மன்றம் வெளியிட்ட திண்ணபுர அந்தாதி மூலமும் உரையும் (2011)

# For all your Mortgage needs...

No income

No Credit

Private Mortgages from

**4.99%** *OAC

Private Mortgages

Home Equity Loans

Commercial Loans

Construction Loans

